ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமோகூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருமோகூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3கு3ணார்ணவம் ।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 5 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## திருவாய்மொழி – தாளதாமரை

‡ தாள தாமரைத் ⋆
தடம் அணி வயல் திருமோகூர் ⋆
நாளும் மேவி நன்கமர்ந்து நின்று ⋆
அசுரரைத் தகர்க்கும் ⋆
தோளும் நான்குடைச் ⋆
சுரி குழல் கமலக் கண் கனிவாய் ⋆
காள மேகத்தை அன்றி ⋆
மற்றொன்றிலம் கதியே ‖ **10.1.1** ‖

இலங்கதி மற்றொன்றெம்மைக்கும் ⋆
ஈன் தண் துழாயின் ⋆
அலங்கல் அங்கண்ணி ⋆
ஆயிரம் பேர் உடை அம்மான் ⋆
நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ் ⋆
திருமோகூர் ⋆
நலங்கழல் அவன் அடி நிழல் ⋆
தடம் அன்றி யாமே ‖ **10.1.2** ‖

அன்றி யாம் ஒரு புகல் இடம் ⋆
இலம் என்றென்றலற்றி ⋆
நின்று நான்முகன் அரனொடு ⋆
தேவர்கள் நாட ⋆
வென்றிம் மூவுலகளித்து ⋆
உழல்வான் திருமோகூர் ⋆
நன்று நாம் இனி நணுகுதும் ⋆
நமதிடர் கெடவே ॥ **10.1.3** ॥

இடர் கெட எம்மைப் போந்தளியாய் ⋆
என்றென்றேத்தி ⋆
சுடர் கொள் சோதியைத் ⋆
தேவரும் முனிவரும் தொடர ⋆
படர் கொள் பாம்பணைப் ⋆
பள்ளி கொள்வான் திருமோகூர் ⋆
இடர் கெடவடி பரவுதும் ⋆
தொண்டீர் ! வம்மினே ॥ **10.1.4** ॥

தொண்டீர் ! வம்மின் ⋆
நம் சுடர் ஒளி ஒரு தனி முதல்வன் ⋆
அண்ட மூவுலகளந்தவன் ⋆
அணி திருமோகூர் ⋆
எண் திசையும் ஈன் கரும்பொடு ⋆
பொருஞ்செந்நெல் விளைய ⋆
கொண்ட கோயிலை வலஞ்செய்து ⋆
இங்காடுதும் கூத்தே ॥ **10.1.5** ॥

கூத்தன் கோவலன் ⋆
குதற்று வல் அசுரர்கள் கூற்றம் ⋆
ஏத்தும் நங்கட்கும் ⋆
அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன் ⋆
வாய்த்த தண் பணை வள வயல் சூழ் ⋆
திருமோகூர் ஆத்தன் ⋆
தாமரை அடி அன்றி ⋆
மற்றிலம் அரணே ‖ **10.1.6** ‖

மற்றிலம் அரண் ⋆
வான் பெரும் பாழ் தனி முதலாச் ⋆
சுற்றும் நீர் படைத்து ⋆
அதன் வழித் தொல் முனி முதலா ⋆
முற்றும் தேவரோடு ⋆
உலகு செய்வான் திருமோகூர் ⋆
சுற்றி நாம் வலஞ்செய்ய ⋆
நம் துயர் கெடும் கடிதே ‖ **10.1.7** ‖

துயர் கெடும் கடிதடைந்து வந்து ⋆
அடியவர் தொழுமின் ⋆
உயர் கொள் சோலை ⋆
ஒண் தடம் அணி ஒளி திருமோகூர் ⋆
பெயர்கள் ஆயிரம் உடைய ⋆
வல் அரக்கர் புக்கழுந்த ⋆
தயரதன் பெற்ற ⋆
மரதக மணித் தடத்தினையே ‖ **10.1.8** ‖

மணித் தடத்தடி மலர்க்கண்கள் ⋆
பவளச் செவ்வாய் ⋆
அணிக்கொள் நால் தடந்தோள் ⋆
தெய்வம் அசுரரை என்றும் ⋆
துணிக்கும் வல் அரட்டன் ⋆
உறை பொழில் திருமோகூர் ⋆
நணித்து நம்முடை நல் அரண் ⋆
நாம் அடைந்தனமே ‖ **10.1.9** ‖

நாம் அடைந்த நல் அரண் ⋆
நமக்கென்று நல் அமரர் ⋆
தீமை செய்யும் வல் அசுரரை ⋆
அஞ்சிச் சென்றடைந்தால் ⋆
காம ரூபம் கொண்டு ⋆
எழுந்தளிப்பான் திருமோகூர் ⋆
நாமமே நவின்றெண்ணுமின் ⋆
ஏத்துமின் நமர்காள் ! ‖ **10.1.10** ‖

‡ ஏத்துமின் நமர்காள் ⋆
என்று தான் குடம் ஆடு கூத்தனை ⋆
குருகூர்ச் சடகோபன் ⋆
குற்றேவல்கள் ⋆
வாய்த்த ஆயிரத்துள் இவை ⋆
வண் திருமோகூர்க்கு ⋆
ஈத்த பத்திவை ஏத்த வல்லார்க்கு ⋆
இடர் கெடுமே ‖ **10.1.11** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் ⋆
சீரார் கண புரம் சேறை திருவழுந்தூர் ⋆
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை ⋆
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை ⋆
சீராரும் மாலிரும் சோலை திருமோகூர் ‖ **37** ‖

**திரு மோகூர்வல்லி சமேத காளமேகப்பெருமாள் திருவடிகளே சரணம்**